அலகு:- 10

கருப்பொருள் :- வீட்டுத்தோட்டம்



❖ வீட்டுத்தோட்டச் செய்கையினால் கிடைக்கும் பிரதிபலன்கள்

- ✓ புத்தம் புதிய காய்கறிகள் பெறலாம்.
- ✓ வருமானம் பெறலாம்.
- ✓ பணம் மீதமாகும்.
- ✓ ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாகக் கழிக்கலாம்.
- ✓ வீட்டுச் சூழல் குளிர்ச்சியும் அழகும் பெறும்.
- ✓ மனமகிழ்ச்சி கிடைக்கும்.
- ✓ உடலுக்கு ஆரோக்கியமானதாக அமையும்.
- ✓ இரசாயனத் தாக்கம் இல்லாத காய்கறிகளைப் பெறலாம்.

www.ikedu.lk

❖ வீட்டுத்தோட்டத்தில் செய்கை பண்ணக்கூடிய பயிர்கள்

1. ஈரவலயத்தின் தாழ்நிலப் பிரதேசங்களில் பின்வரும் பயிர்களைப் பயிரிடலாம்.

வெண்டி, கத்தரி, பயற்றை, போஞ்சி, சிறகவரை, கெக்கரி, தக்காளி, மிளகாய் ஆகிய பயிர் வகைகளையும் கீரை வகைகளையும் பயிரிடலாம்.

2. மழைவீழ்ச்சி அதிகமான ஈரவலயத்தின் மலைநாட்டு மத்திய நாட்டு பிரதேசங்களில் பின்வரும் பயிர்களைப் பயிரிடலாம்.

லீக்ஸ், கோவா, பாகல், புடோல், பயற்றை, கறிமிளகாய், சிறகவரை, நோக்கோல், உருளைக்கிழங்கு போன்ற பயிர் வகைகளையும் பயிரிடலாம்.

3. மழைவீழ்ச்சி குறைந்த பிரதேசங்களில் (உலர் பிரதேசங்களில்) குறைவான நீரை விரும்பும் பயிர்களான

கெக்கரி, கண்டங்கத்தரி, வெண்டி, பூசணி, தும்பை, வெள்ளரி, சுண்டங்கத்தரி, சாம்பல் வாழை, நீற்றுப்பூசணி, முருங்கை, அகத்தி போன்ற கீரைகளையும் பயிரிடலாம்.

www.lkedu.lk

❖ கூட்டெரு

- சேதனைப் பசளைகளை நிலத்துக்கு இடுவதன் மூலம் பயிர்களுக்கு வேண்டிய போசணையைப் பெற்றுக் கொள்ள முடியும்.
- சேதனைப் பசளைகளில் மிகப் பிரதானமாக மாட்டுச்சாணம், கோழி உரம், ஆட்டுப்பிழுக்கை, பச்சை இலைகுழை என்பன பயன்படுத்தப்படுகின்றன.

❑ கூட்டெரு தயாரிக்கப் பயன்படும் பொருட்கள்

1. கால்நடை உரம்
2. பண்ணை பயிர் மீதங்கள் (வைக்கோல்)
3. பச்சை இலைகுழை

இப் பொருட்களை உரிய விகிதத்தில் சேர்த்து கூட்டெரு தயாரிக்க முடியும்.

❑ கூட்டெரு தயாரிக்கும் முறைகள்

1. குவியல் முறை
2. குழி முறை

கூட்டெரு தயாரிக்க மிக இலகுவான முறை குவியல் முறையாகும்.

www.ikeau.lk

குவியல் முறையில் கூட்டெரு தயாரிக்கும் விதம்

- குவியல் முறையில் மேற்குறிப்பிட்ட பொருட்களை படைபடையாக அடுக்குதல்.
- குவியலை மீற்றர் உயரமளவில் உயர்த்தி அதனை பொலித்தீன், வைக்கோல் அல்லது தென்னை ஓலை போன்றவற்றால் மூடுதல்.
- இக்குவியலை 2 வாரங்களுக்கு ஒருமுறை கலைத்து கலந்து மீண்டும் குவித்தல்.
- 2 மாதங்களில் மிகத் தரமான கூட்டெருவைப் பெற்று பயிர்களுக்குப் பயன்படுத்தலாம்.

www.lkedu.lk

❖ பிராணிகளிடமிருந்து பாதுகாக்கும் வழிகள்

- பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் பிராணிகளைக் குறைக்க இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்துவதை விட பாரம்பரிய முறைகளையும் வேறு மாற்று முறைகளையும் பயன்படுத்துவது சிறந்ததாகும்.

1. தாவரங்களுக்கு உரிய முறையில் நீர், பசளை, சூரிய ஒளி என்பவற்றை வழங்கி உறுதியாக வளரச் செய்தல்.
2. தீங்கு செய்யும் பிராணிகளின் பூச்சிகளின் முட்டைகளை தேடி அழித்தல்.
3. தீங்கு செய்யும் பூச்சிகளை அழித்தல்.
4. பூச்சிகளால் தாக்கப்பட்ட பகுதிகளை வெட்டி அகற்றுதல்.
5. வீட்டுத்தோட்டத்தை துப்பரவாக வைத்திருத்தல்.
6. பிராணிகளின் வரவைத் தூண்டும் புற்களைப் பிடுங்குதல்.
7. பன்றி, ஆடு, மாடு போன்றவற்றின் தாக்கத்தைக் குறைக்க வேலிகள் அமைத்தல்
8. வெருளி கட்டுதல் - நீர்ப்பிசாசு பயன்படுத்துதல் - காற்றுக்கிலுக்கி பயன்படுத்துதல்.
9. தீங்கு விளைவிக்கும் பூச்சிகள் பிராணிகளைப் பிடித்துண்ணும் பிராணிகளின் வரவைத் தூண்டுதல்.
10. சிலந்தி வலை பின்ன வகை செய்தல்

www.kedu.lk

பயிர்களுக்கு தீங்கு செய்யும் பிராணிகளைக் குறைக்கக் கூடிய பாரம்பரிய முறைகள்

- பயிர்களுக்கு விறகுச் சாம்பல் விசுறுதல்
- வேப்பெண்ணெய் தெளித்தல்
- வேப்பிலை துகள்களைப் போடுதல்
- புகை மூட்டுதல்
- புகையிலைச் சாற்றைப் பயன்படுத்துதல்
- வெள்ளைப் பூண்டுத் திரவம் தெளித்தல்
- மரமுந்திரி விதைக் கோதில் புகையூட்டல்
- பூச்சிகளை உண்ணும் பிராணிகளின் வரவைத் தூண்ட முசுறுக் கூட்டைப் போடுதல்

www.lkedu.lk

வீட்டுத் தோட்டப் பயிர்களுக்கு தீங்கு செய்யும் பிராணிகள்.

- வண்டு
- ஓணான்
- கறையான்
- இலையட்டை
- பச்சிலைப் பூச்சி
- மயிர்க் கொட்டி
- தத்துவெட்டி
- நத்தை
- மீலிமூட்டைப்பூச்சி
- ஆமை வண்டு
- தண்டு கோதி
- வெட்டுக்கிளி
- வெண்மூட்டைப்பூச்சி
- பழஈ
- அழுக்கணவன்
- முசுறு
- எலி

www.lkedu.lk

வீட்டுத் தோட்டப் பயிர்களுக்கு நன்மை செய்யும் பிராணிகள்.

- பாம்பு
- தேனீ
- மண்புழு
- மைனா
- வண்ணத்துப்பூச்சி
- கும்பிடுபூச்சி
- தவளை
- செண்பகம்
- உடும்பு
- ஆந்தை
- சிலந்தி
- தும்பி
- குளவி
- தேரை
- மீன்கொத்தி

www.lkedu.lk

வீட்டுத் தோட்டப் பயிர்களைத் தாக்கும் நோய்கள்

நோய்கள்	பயிர்கள்	நோய்க்காரணிகள்
அழுகல்நோய்	அன்னாசி, பூசணி, உருளைக்கிழங்கு	பக்றீரியா
இலைகள் வாடல்	தக்காளி, புகையிலை, தோடை, திராட்சை	பக்றீரியா
வேர் முடிச்சு	வெண்டி, பப்பாசி	வட்டப்புழு
இலைப்புள்ளி	மிளகாய், தக்காளி	பங்கசு
அடியழுகல்	கோவா	பங்கசு
இலைக்குருமன்	மிளகாய், வாழை	வைரசு

www.ikedu.lk

பொருத்தமான விடை எழுதுக.

1. வீட்டுத்தோட்டச் செய்கையின் பயன்கள் 4 எழுதுக.
   புத்தம் புதிய காய்கறிகளைப் பெறலாம்.
   வருமானம் பெறலாம்.
   பணம் மீதமாகும்.
   மனமகிழ்ச்சி கிடைக்கும்.

2. வீட்டுத்தோட்டத்தில் செய்கை பண்ணக்கூடிய பயிர்கள் 4 எழுதுக.
   வெண்டி, கத்தரி, பயற்றை, போஞ்சி

3. சேதனப் பளைகள் 2 எழுதுக.
   மாட்டுச்சாணம், கோழி உரம்

4. வீட்டுத்தோட்டப்ப பயிருக்கு நன்மை செய்யும் பிராணிகள் 4 எழுதுக.
   தேனீ, மண்புழு, மைனா, தும்பி

www.ikedu.lk

5. வீட்டுத்தோட்டப்பயிருக்கு தீமை செய்யும் பிராணி 4 எழுதுக.

வண்டு ஓணாண், கறையான், நத்தை

6. பின்வரும் பயிர்களைத் தாக்கும் நோய்களை எழுதுக.

பூசனி -
அழுகல் நோய்

தக்காளி -
இலை வாடல், இலைப்புள்ளி

மிளகாய் -
இலைப்புள்ளி, இலைக்குருமன்

கோவா -
அடியழுகல்

www.lkedu.lk

❖ மூன்று மாத காலத்தினுள் விளைச்சல் தரக்கூடிய பயிர்கள்

- ✓ அவரை
- ✓ பயற்றை
- ✓ வெண்டி
- ✓ பீர்க்கு
- ✓ பாகல்
- ✓ புடோல்
- ✓ தக்காளி
- ✓ கறிமிளகாய்
- ✓ வெள்ளரி
- ✓ பூசணி
- ✓ போஞ்சி
- ✓ பயறு

www.lkedu.lk

❖ ஆரோக்கியமான நாற்றுக்களைத் தரக்கூடிய வித்துக்களின் வெளிப்புறத்தே காணக்கூடிய இயல்புகள்

- நன்கு முதிர்ச்சியடைந்திருத்தல்
- பூச்சித் தாக்கம் அற்றவையாகக் காணப்படல்
- பழுதுகள் இல்லாதிருத்தல்
- நன்கு முதிர்ச்சியடைந்திருத்தல்
- உள்ளீடு நிரம்பி திரண்டிருத்தல்/ உணவு நிரம்பிசெழித்து வளர்ந்திருத்தல்
- மேற்றோல் மேடுபள்ளமின்றி பளபளப்பாக இருத்தல்
- வெளியுறையானது கறைப்புள்ளிகளின்றி பிரகாசமாக இருத்தல்
- பூச்சிகள் இல்லாதிருத்தல்

❑ நடுகைக்கு பொருத்தமான வித்துகளை தெரிவு செய்யும் விதம்

- தெரிவு செய்த வித்துக்களை நீர் உள்ள கண்ணாடிப் பாத்திரத்தில் போதுமான அளவு நேரம் இட்டு வையுங்கள்.
- கண்ணாடிப் பாத்திரங்களில் உள்ள வித்துக்களை அவதானித்து நீருள் மிதக்கும் மற்றும் அமிழும் வித்துக்களை இணங்காண்க.

www.lkedu.lk

❑ பாத்திகள் அமைக்கும் விதம்

- பாத்திகள் அமைப்பதற்கான இடங்களை ஒதுக்கிக் கொள்க.
- பெற்றோரின் ஒத்துழைப்புடன் பாத்திகளை அமைக்க.
- பாத்திகள் அமைக்க இடவசதிகள் இல்லாவிடின் மாற்று வழியாக நடுகைச் சட்டிகளைப் பயன்படுத்துக.
- உங்களது வீட்டுத்தோட்டத்திற்குப் பொருத்தமான பயிர்ச்செய்கை வடிவங்களுடன் பாத்திகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப அமைக்கலாம்.
- வீட்டுத்தோட்ட நிருமாணத்தில் பல்வேறு உணவுப் பயிர்ச்செய்கை வடிவங்களையுடைய பாத்தி வகைகள் பயன்படுத்தப்படுகின்றன.

உ+ம் : சதுரம், வட்டம், அரைவட்டம், நட்சத்திரம், இதய வடிவம் போன்ற பல வடிவங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

www.ikeou.lk

❑ வித்துக்களை நடுகை செய்யும் விதம்

- நீரில் அமிழ்ந்த வித்துக்களை பாத்திதிகளில் உரிய இடைவெளிகளில் குழி அமைத்து நடுகை செய்க.
- நீரில் மிதந்த வித்துக்கள் சிலவற்றையும் அப்பாத்திகளில் ஒரு சிறு பகுதியில் நடுக.
- போதுமான அளவுக்கு நீர் இடுக.
- வித்து முளைத்தலை நாளுக்கு நாள் அவதானிக்குக.
- நீரில் அமிழ்ந்த வித்துக்களின் முளைத்தலையும் நீரில் மிதந்த வித்துக்களின் முளைத்தலையும் ஒப்பிடுக.

www.ikeau.lk

- வித்துக்களை நடுகை செய்ய முன்னர் நீரில் ஊறவிட்டு நடுவதால் விரைவாக முளைக்கும்.

- நீரில் அமிழும் வித்துக்களே நடுகைக்கு மிகவும் உகந்தவையாகும்.

- நீரில் அமிழும் வித்துக்களே ஆரோக்கியமான நாற்றுக்களை உருவாக்கும்.

- நீரில் மிதக்கும் வித்துக்கள் நடுவதற்கு பொருத்தமற்றவையாகும்.

- நீரில் மிதக்கும் வித்துக்கள் முளைத்தாலும் அவை ஆரோக்கியமான நாற்றுக்களாக காணப்படாது.

www.lkedu.lk

❖ நினைவில் கொள்வோம்.

- விதைகள் மூலம் இனப் பெருக்கம் செய்யப்படும் பயிர்கள் - மிளகாய், கறி மிளகாய், தக்காளி ,கத்தரி, வெண்டி ,போஞ்சி ,சிறகவரை, கரட், பீற்றூட், நோகோல், முள்ளங்கி, லீக்ஸ், பூசணி, கெக்கரி, புடோல், வெள்ளரி, பீர்க்கு, பாகல்

- கிளைகள் தண்டுத் துண்டங்கள் மூலம் இனப்பெருக்கம் செய்யப்படும் தாவரங்கள் - கங்குன், வற்றாளை, பொன்னாங்காணி ,அகத்தி ,முருங்கை

- நெற்றுப் பயிர்கள் - பயற்றை, போஞ்சி ,பீர்க்கு, புடோல், சிறகவரை, வெண்டி

www.kedu.lk